Deputy Superintendent of Police
Vigilance and Anti Corruption
Tiruvannamalai

**Under Section 173 BNSS**

# FIRST INFORMATION REPORT

முதல் தகவல் அறிக்கை
~~(Under Section 154 Cr.P.C.)~~
~~(குற்ற.வி.தொ.பிரிவு-154-இன் கீழ்)~~

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I
8074742

C

1. District மாவட்டம் : **Tiruvannamalai** PS: காவல்நிலையம் **V&AC** Year ஆண்டு **2024** FIR No. மு.த.அ. எண் **09/2024** Date நாள் **01.07.2024**

2. (i) Act சட்டம்: **The Prevention of Corruption Act 1988 as amended by The PC (Amendment) Act 2018.** Sections பிரிவுகள்: **7**
   (ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் — Date from : நாள் முதல் **30.06.2024** — Date to : நாள் வரை
   Time Period : நேர அளவு — Time from : நேரம் முதல் **1500 Hrs** — Time to : நேரம் வரை
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் **01 .07.2024** Time நேரம் : **0700 Hrs**
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் **Vol - II** Time நேரம் : **0830 Hrs**

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக **Computer Typed**

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும் **25 Kms west**
   Beat Number : முறைக் காவல் எண்
   (b) Address : முகவரி **Revenue Inspector Office, Eraiyur, Chengam Taluk,Tiruvannamalai District.**
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் — District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் **Tr.A.Palanisamy**
   (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் **S/o.Arumugam**
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு **Age-62**
   (d) Nationality : நாட்டினம் **Indian**
   (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள்
   Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் **Carpenter**
   (g) Address : முகவரி **Melnachipattu Village, Chengam Taluk, Tiruvannamalai District**

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

**1.Tmt.Bharathi, Revenue Inspector, Revenue Inspector office, Eraiyur, Chengam Taluk, Tiruvannamalai District.**

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary) ------
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved : ------
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: ------
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) : ------
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்துஅனுப்பப்படுகிறது.

திருவண்ணாமலை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணை கண்காணிப்பாளர் ஆகிய நான் 01.07.2024 ஆம் தேதி காலை 07.00 மணியளவில் அலுவலகத்தில் ஆஜரில் இருந்த போது புகார்தாரர் A.பழனிசாமி, வயது-62, த/பெ.ஆறுமுகம், மேல்நாச்சிப்பட்டு கிராமம், செங்கம் தாலுக்கா, திருவண்ணாமலை மாவட்டம். செல்.9787582864 என்பவர் நேரில் ஆஜராகி, கணினியில் தட்டச்சு செய்யப்பட்ட புகார் மனுவை கொடுத்தார். மேற்படி புகார் மனுவின் விவரம் பின்வருமாறு: அனுப்புநர் A.பழனிசாமி, வயது-62, த/பெ.ஆறுமுகம், மேல்நாச்சிப்பட்டு கிராமம், செங்கம் தாலுக்கா, திருவண்ணாமலை மாவட்டம். செல்.9787582864. பெறுநர் உயர்திரு. காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருவண்ணாமலை. அய்யா, நான் திருவண்ணாமலை மாவட்டம், செங்கம் வட்டம், மேல்நாச்சிப்பட்டு கிராமத்தில் வடக்கு தெருவில் உள்ள எனது பூர்வீகமான வீட்டில் என் குடும்பத்துடன் வசித்து வருகிறேன். நான் 8 ஆம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் மரவேலை (கார்பெண்டர்) செய்து ஜீவனம் செய்து வருகிறேன்.

-இதன் தொடர்ச்சி தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையிட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

ஆ.பழனிசாமி 1-7-024

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையிட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
01.07.2024. 830 hrs

Name: பெயர் S. VELMURUGAN
Rank: நிலை DSP No. எண் V&AC
TIRUVANNAMALAI

என் மனைவி பெயர கமலா. எங்களுக்கு ஜெயவேல் மற்றும் பவுன்குமார் ஆகிய இரண்டு மகன்கள் உள்ளனர். மூத்தமகன் ஜெயவேல் என்பவருக்கு திருமணமாகிவிட்டது இரண்டாவது மகன் பவுன்குமார் என்பவருக்கு இன்னும் திருமணமாகவில்லை. இருவரும் சரியாக படிக்காத காரணத்தினால் இருவரும் தனியாக மரவேலை (கார்பெண்டர்) செய்துவருகிறார்கள். என் தந்தை ஆறுமுகம் கடந்த 1996 ஆம் ஆண்டு இறந்துவிட்டார். எனது தந்தை ஆறுமுகத்திற்கு இரண்டு மனைவிகள் ஆகும். முதல் மனைவி ஜெயலட்சுமி என்பவருக்கு குழந்தை இல்லாத காரணத்தினால் எனது தாயராகிய சரோஜாம்மாள் என்பரை இரண்டாவதாக திருமணம் செய்து அவர்களுக்கு நான் மற்றும் எனது தங்கை ராஜேஷ்வரி ஆகிய நாங்கள் இருவரும் வாரிசுகளாவோம். எங்களது பூர்வீக சொத்தான 1 ஏக்கர் நிலம் எங்களது கிராமத்தில்; உள்ளது. எனது தந்தையின் முதல் மனைவியான ஜெயலட்சுமி மற்றும் எனது தாயார் சரோஜாம்மாள் ஆகிய இருவரும் இறந்துவிட்ட காரணத்தினால் மேற்படி சொத்தினை பாகப்பிரிவினை செய்ய வாரிசு சான்று வேண்டி இ-சேவை மையத்தில் கடந்த மார்ச் மாதம் முதல் முறையாக விண்ணப்பம் செய்து அதனை கிராம நிர்வாக அலுவலர் ஏற்பு செய்து இறையூர் வருவாய் ஆய்வாளர் திருமதி.பாரதி என்பவர் மூலமாக 12.04.2024 – ந்தேதி எனது விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டது. மீண்டும் நான் கடந்த 08.05.2024, 23.05.2024, 25.06.2024 ஆகிய தேதிகளில் நான் விண்ணப்பித்த விண்ணப்பங்களை வருவாய் ஆய்வாளர் திருமதி.பாரதி அவர்கள் நிராகரிப்பு செய்தார். அதன் பிறகு கடந்த 28.06.2024 -ந்தேதி இறையூரில் உள்ள வருவாய் ஆய்வாளர் அலுவலகத்திற்கு நான் நேரில் சென்று வருவாய் ஆய்வாளர் திருமதி.பாரதி அவர்களை சந்தித்து நான் 4 முறையாக வாரிசு சான்று வேண்டி விண்ணப்பம் அளித்தும் தொடர்ந்து நீங்கள் நிராகரித்து வருகிறீர்களே என்று கேட்டதற்கு நீங்கள் இ-சேவை மையத்தில் விண்ணப்பித்தால் போதுமா என்னை நேரில் வந்து பார்த்து உங்களுடைய வாரிசு சான்று பரிந்துரை செய்ய எனக்கு இலஞ்சமாக ரூ.1,000/- கொடுத்தால் தான் என்னால் பரிந்துரை செய்ய முடியும் என்றும், நீங்கள் இ-சேவை மையத்தில் விண்ணப்பித்த விண்ணப்பங்களை இலஞ்ச பணம் கொடுக்காததால் தான் நான் பலமுறை நிராகரிப்பு செய்தேன் என்றும், நீங்கள் மீண்டும் இ-சேவை மையத்தில் விண்ணப்பித்துவிட்டு இலஞ்ச பணம் ரூ.1,000/-த்துடன் வா என்றும் கூறினார். நான் அதற்கு என்னிடம் அவ்வளவு பணம் இல்லை என்றும், நானே கார்பெண்டர் வேலை செய்து பிழைப்பு நடத்தி வருகிறேன்

என்று சொன்னதற்கு அவர் ரூ.1,000/- கொடுத்தால் மட்டுமே என்னால் வாரிசு சான்றுக்கு பரிந்துரை செய்ய முடியும் என்று கராராக சொல்லிவிட்டார். நான் அதற்கு இந்த வாரிசு சான்றுக்காக நான்கு மாதங்களாக அலைந்து பலமுறை உங்களால் நிராகரிக்கப்பட்டது என்று சொன்னதற்கு இலஞ்ச பணம் கொடுக்காமல் வாரிசு சான்றுக்கு பரிந்துரைக்க முடியாது என்று கராராக சொல்லி அனுப்பிவிட்டார். நானும் என்ன செய்வதென்று தெரியாமல் அலுவலகத்தை விட்டு வெளியே வந்துவிட்டேன். பின்னர் நான் மீண்டும் 29.06.2024 ந்தேதி வாரிசு சான்றுக்காக இ-சேவை மையத்தில் விண்ணப்பித்தேன். அதன் பிறகு மறுநாள் 30.06.2024 அன்று என்னுடைய கிராமத்திற்கு சுமார் 3.00 மணி அளவில் இறையூர் வருவாய் ஆய்வாளர் திருமதி.பாரதி அவர்கள் இந்த வாரிசு சான்று சம்மந்தமாக நேரடி விசாரணைக்கு வந்து என்னை விசாரித்தார்கள். அப்போது நான் கேட்ட இலஞ்ச பணம் ரூ.1,000/- எங்கே என்று கேட்டார்கள். நான் அதற்கு மீண்டும் என்னிடம் அவ்வளவு பணம் இப்போதைக்கு இல்லை என்று சொன்னதற்கு அவர் நாளை இலஞ்ச பணம் ரூ.1,000/-த்துடன் என்னை இறையூர் வருவாய் ஆய்வாளர் அலுவலகத்தில் வந்து என்னிடம் கொடுக்கவும் இல்லை என்றால் மீண்டும் உங்களது விண்ணப்பத்தை நிராகரித்துவிடுவேன் என்று கராராக சொல்லிவிட்டு சென்றுவிட்டார். என்னுடைய பாக பிரிவினைக்கு வாரிசு சான்று வேண்டி பலமுறை விண்ணப்பித்தும் வேண்டுமென்றே நிராரிப்பு செய்து இலஞ்ச பணம் ரூ.1,000/- கொடுத்தால் தான் பரிந்துரைக்க முடியும் என்று என்னிடம் கராராக கூறிய இறையூர் வருவாய் ஆய்வாளர் திருமதி.பாரதி அவர்களுக்கு இலஞ்சம் கொடுக்க எனக்கு விருப்பம் இல்லாததால் எனக்கு தெரிந்த நபர் மூலம் கணினியில் தட்டச்சு செய்து புகார் மனுவை தயார் செய்து இன்று 01.07.2024-ந்தேதி திருவண்ணாமலை லஞ்ச ஒழிப்புத்துறை அலுவலகத்திற்கு நேரில் வந்து புகார் மனு அளிக்கிறேன். மேலும் வாரிசு சான்று பரிந்துரை செய்ய என்னிடம் இலஞ்ச பணம் ரூ.1,000/- கேட்ட இறையூர் வருவாய் ஆய்வாளர் திருமதி.பாரதி மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறு அய்யா அவர்களை கேட்டுக்கொள்கிறேன்.. இப்படிக்கு, (SdXXXXX) A.பழனிசாமி 01.07.2024.

Sir,

Received the complaint on 01.07.2024 at 07.00 hrs and a discreet enquiry was made on the general reputation of the accused officer and it is learnt to be bad. The motives, reliability and the antecedents of the informant was also verified and found nothing adverse. Since the information contained in this complaint discloses a cognizable offence, today on 01.07.2024 at 08.30 hrs a case was registered in Tiruvannamalai V&AC Cr.No.09/2024, u/s 7 of the Prevention of Corruption Act 1988 as amended by the PC (Amendment) Act 2018. (Sd/-XXXXX) 01.07.2024. S.Velmurugan, Deputy Superintendent of Police, V&AC, Tiruvannamalai.

The FIR in original along with the complaint was sent to the Hon'ble Special Judge Cum CJM, Tiruvannamalai and sent the copies to the officers concerned.

01.07.2024

(S. VELMURUGAN
DSP V&AC
TIRUVANNAMALA